**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 139 / 2022**

**வா.சா.1 – செல்வகுமார்** **14.08.2025**

**1 , 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கை எனது தகப்பனார் சப்பாணியாபிள்ளை தாக்கல் செய்துள்ளார். 1, 2 பிரதிவாதிகள் மீது எனது அப்பா இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனது அப்பாவின் அனுபவத்தை இடைஞ்சல் செய்ததால் அனுபத்தை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எனது அப்பா இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் 134/3 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் 101 செண்டு ஆகும். 1960ல் மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பாணையின் படி தாவா சொத்து எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டதாகும். அந்த அசல் வழக்கு எண் 212/1956 என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது அப்பா, எனது அப்பத்தா மீனாட்சிஅம்மாள் ஆகியோர் வாதிகள், அந்த வழக்கில் சப்பாணிமுத்தம்மாள், காத்தாயிஅம்மாள் ஆகியோர் பிரதிவாதிகள் ஆவார்கள். அந்த வழக்கு நடந்த போது எனது அப்பா மைனர் ஆவார். நான் 1978ல் பிறந்தேன். அந்த வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது எனது அப்பா சொல்லி தெரியும். சலுகையா பிள்ளை என்ற சப்பாணியாபிள்ளை எனது தாத்தா. அவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி மீனாட்சி, 2வது மனைவி ராக்காயி. முதல் மனைவி மீனாட்சிக்கு பிறந்தவர் தான் எனது அப்பா சப்பாணியாபிள்ளை. இரண்டாவது மனைவி ராக்காயிக்கு பிறந்தவர்கள் தான் சப்பாணிமுத்தம்மாள், காத்தாயி என்றால் சரிதான். சப்பாணிமுத்தம்மாள் கணவர் பெயர் மருதுபிள்ளை. சப்பாணிமுத்தம்மாளுக்கும்

மருதுபிள்ளைக்கும் பிறந்தவர் தான் 1ம் பிரதிவாதி நல்லம்மாள் என்றால் சரிதான். சப்பாணிமுத்தம்மாளுக்கு 1ம் பிரதிவாதி மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். காத்தாயிஅம்மாளின் கணவர் பெயர் தங்கச்சாமிபிள்ளை என்றால் சரிதான். காத்தாயிஅம்மாளுக்கு முத்து, செல்லம், வள்ளி ஆகிய 3 பெண் மக்கள் மற்றும் வெள்ளைச்சாமி, கணேசன், முருகன் ஆகிய 3 ஆண் மக்கள் வாரிசுகள் என்றால் சரிதான். வெள்ளைச்சாமி இறந்துவிட்டார். வெள்ளைச்சாமிக்கு இரண்டு பிள்ளைகள் வாரிசுகளாக உள்ளார்கள். சலுகையாபிள்ளை என்ற சப்பாணியாபிள்ளையின் முதல் மனைவியின் வாரிசுகளுக்கும் 2வது மனைவி ராக்காயின் வாரிசுகளுக்கும் இடையே தான் அ.வ.எண்.212/1956 வழக்கு நடந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையின் நகலை தான் நான் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சப்பாணிமுத்தம்மாளும் காத்தாயிஅம்மாளும் சேர்ந்து தான் வாதிகளாக இருந்து எனது அப்பா சப்பாணியாபிள்ளை, எனது அப்பத்தா மீனாட்சிஅம்மாள் மற்றும் 15 நபர்கள் மீது பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 212/1956 எத்தனை சொத்துக்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. எனது பிராதில் அசல் வழக்கு எண்.212/1956ல் ஏ மற்றும் பி செட்டியூல் சொத்தில் எத்தனை இலக்கங்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–1 திர்ப்பாணையில் ஏ செட்டியூலில் எத்தனை சொத்துக்கள் பி செட்டியூலில் எத்தனை சொத்துக்கள் என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள எழுத்துக்களை என்னால் படிக்க முடியவில்லை. வா.சா.ஆ.1

ஆவணத்தை பார்த்து காத்தாயிஅம்மாள், சப்பாணிமுத்தம்மாள் ஆகியோருக்கு எந்தெந்த பாகம் ஒதுக்கப்பட்டது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. இந்த வழக்கின் தாவா சொத்து வா.சா.ஆ.1 தீர்ப்பாணையில் அட்டவனை 2ல் 7வது இலக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஏ செட்டியூல் சொத்துக்கள் யாருக்கு ஒதுக்கப்பட்டது அது என்ன சொத்துக்கள் என்று எனக்கு தெரியாது. பி செட்டியூல் சொத்தில் எத்தனை சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட ஏ மற்றும் பி செட்டியூல் சொத்துக்களை யார் யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் பி செட்டியூல் 7வது லக்க சொத்தை நாங்கள் அனுபவித்து வருகிறோம் இதர சொத்துக்களை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண் 212/1956 ல் 1960ம் ஆண்டு ஏற்பட்ட சமரச தீர்ப்பாணையின் பேரில் சொத்துக்களை ஒப்படைப்பு பெற நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் சமாதானமாக தீர்ப்பு ஏற்பட்டதால் ஒப்படைப்பு பெற நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்படவில்லை. நான் 1978ல் பிறந்ததால் அசல் வழக்கு 212/1956ல் ஏற்பட்ட தீர்ப்பாணையின் படி அவரவர் சொத்துக்களை அவரவர் ஒப்படைப்பு பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் நாங்கள் சொத்தை அனுபவம் செய்து வருகிறோம். வா.சா.ஆ.1 சமரச தீர்ப்பாணையின்படி தரப்பினர்கள் சொத்துக்களை சுவாதீனம் எடுத்து அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சமரச தீர்ப்பாணையின் சரத்துக்களின் படி தரப்பினர்கள் யாரும் நடந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சமரச தீர்ப்பாணையில் 1ம்

பிரதிவாதி மற்றும் அவரது சகோதரிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை இன்று வரை நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 212/1956 வழக்கின் தரப்பினர்களையோ அவர்களது வாரிசுகள் அனைவரையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை ஏன் இந்த வழக்கில் தர்பபினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவா்கள் எங்கள் அனுபவத்தை இடையூறு செய்யவில்லை அதனால் சேர்க்கவில்லை, தாவா சொத்து இன்று வரை சப்பாணிமுத்தம்மாள் பெயரில் பட்டா இருந்து வருகிறது என்றால் தவறுதலாக சப்பாணிமுத்தம்மாள் பெயரில் பட்டா இருந்து வருகிறது. அசல் வழக்கு எண் 212/1956 வழக்கின் தீர்ப்புக்கு பின்பு தான் சப்பாணிமுத்தம்மாள் பெயரில் பட்டா ஏறபட்டு இன்று வரை இருந்து வருகிறது என்றால் சரிதான். இந்த விவரம் எனது தந்தைக்கு தெரியும், சப்பாணிமுத்தம்மாள் பெயரில் பட்டா 60 ஆண்டுகளுக்கு மேல் இருந்து வருகிறது என்றால் சரிதான் ஆனால் எனது தந்தை பட்டாவை மாற்றுவதற்கு முயற்சி செய்து வந்தார். எனது அப்பா பட்டாவை மாற்றுவதற்கு முயற்சி செய்து வந்ததை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது அப்பா எனக்கு 05.08.2020 ல் நான்கு சொததுக்களை பொறுத்து ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், அந்த 4 சொத்துக்களில் முதலாவது சொத்து சர்வே எண் 110/7 16 சென்டாகும். மேற்படி 1வது லக்க சொத்தின் நான்குமால் வடக்கே சோனை நிலம் கிழக்கே மாணிக்கம் நிலம் தெற்கே மெயின்ரோடு, மேற்கே சப்பாணிமுத்தம்மாள் நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 110/7ன் மொத்த விஸ்தீரணம் 16 செண்டு என்றால் சரிதான்.

மேற்படி சர்வே எண் 110/7ல் மேல்புறம் பாதி 1ம் பிரதிவாதியின் தாயார் சப்பாணிமுத்தம்மாளுக்கு ஒதுக்கப்பட்டது என வா,சா,ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி மேல்புறம் பாதி நீதிமன்றம் மூலமாக 1998ல் எனது அப்பாவிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி 1998 நீதிமன்ற உத்திரவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 சமரச தீர்ப்பாணையில் ஏ செட்டியூல் 2வது இலக்க சொத்தின் நான்குமால் தான் எனது அப்பா எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட்டில் குறிப்பிடபப்ட்டுள்ளது என்றால் சரியல்ல, வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஏ செட்டியூல் 2வது இலக்க சொத்தில் 1ம் பிரதிவாதியின் தாயார் சப்பாணியமுத்தம்மாளுக்கு மேல்புறம் பாதி பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல அதன் பிறகு வழக்கு நடந்து 1998ல் ஒப்படைப்பு பெற்றுவிட்டோம். மேற்படி ஏ செட்டியூல் 2வது இலக்க சொத்தை எனது அப்பா எனக்கு தானமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண் 110/7 திருப்பாச்சேத்தி மெயின்ரோட்டின் வடக்கே உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி சர்வே எண் 110/7ல் கெட்டி கட்டிட மச்சு வீடு இன்று வரை உள்ளது என்றால் சரிதான். மேற்படி மச்சு வீட்டின் மேற்கிலுள்ள கடையை 1ம் பிரதிவாதியின் தாயார் சப்பாணிமுத்தம்மாளுக்கு கொடுத்துவிடவேண்டும் என்று வா.சா.ஆ,.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் 1998ல் நீதிமன்றம் மூலம் ஒப்படைப்பு பெற்றுவிட்டேன். வா.சா.ஆ.1 தீர்ப்பாணையின் படி அதன் தரப்பினர்கள் நடந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 110/7ல் கடைகள் உள்ளது, எனது அப்பா எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் மச்சுவீடு மற்றும் கடைகள்

காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. <u>என்னிடம் காட்டப்படுவது எனது அப்பா எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் இணையதள சான்றிட்ட நகல் என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ.1</u> சர்வே எண் 110/7ல் கடைகள் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வேஎண் 110/7 நஞ்சை நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 17வது பக்கத்தில் உள்ள புகைப்படம் எந்த சொத்தின் புகைப்படம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 110/7ல் கடைகள் உள்ள நிலையில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் 110/7 நஞ்சைநிலம் என குறிப்பிட்டு பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 110/7 யை சுற்றிலும் குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான்.

வழக்குரைஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகின்றது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை